# தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்க தீர்மானம்: நோட்டீஸில் 193 எம்.பி.க்கள் கையொப்பம்

**புது தில்லி, மார்ச் 12:** தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரும் தீர்மானம் தொடர்பான நோட்டீஸில் 193 எம்.பி.க்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

எஸ்.ஐ.ஆர். முடிந்த பிறகு வெளியான இறுதி வாக்காளர் பட்டியலில், தமிழகம், மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் பல லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. பாஜகவும், தேர்தல் ஆணையமுமே திட்டமிட்டு வாக்காளர்களை நீக்கிவிட்டதாக திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

மேலும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரி, நாடாளுமன்ற இரு அவைகளிலும் தீர்மானம் கொண்டு வரவும் எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. இந்தத் தீர்மானம் கொண்டுவருவதற்கான நோட்டீஸில் எம்.பி.க்களின் கையொப்பங்களை எதிர்க்கட்சிகள் பெற்று வந்தன.

அந்தப் பணி முடிந்ததையடுத்து, நாடாளுமன்ற இரு அவைகளிலும் அதை அளிக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. முதல்கட்டமாக ஏதேனும் ஒரு அவையில் மட்டும் வெள்ளிக்கிழமை (மார்ச் 13) நோட்டீஸை அளிக்க எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளதாக சொல்லப்படுகிறது. ஆனால், எது எந்த அவை என உறுதியாகத் தெரியவில்லை என தில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

சட்டப்படி இதுபோன்ற நோட்டீஸில் மக்களவை எம்.பி.க்கள் 100 பேரும், மாநிலங்களவை எம்.பி.க்கள் 50 பேரும் குறைந்தபட்சம் கையொப்பமிட்டிருக்க வேண்டும். அப்போது தான் நோட்டீஸை அளிக்க முடியும். ஆனால் தற்போது 193 எம்.பி.க்கள் கையொப்பமிட்டுள்ளனர். குறிப்பாக, 'இண்டி' கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சி எம்.பி.க்களும் கையொப்பமிட்டுள்ளனர். மேலும், இக்கூட்டணியில் இடம்பெறாத ஆம் ஆத்மி கட்சி எம்.பி.க்களும் கையொப்பமிட்டிருப்பதாக தில்லி வட்டாரங்கள் கூறின.

அந்த நோட்டீஸில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பாகுபாட்டுடன் நடந்து கொண்டார் என்பது உள்ளிட்ட 7 குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கும் நடைமுறையே தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கவும் கடைப்பிடிக்கப்படுகிறது.

அதாவது, நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி, பதவி நீக்கம் செய்யப்படுவார். இந்திய வரலாற்றில் இதுவரை எந்த தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராகவும் தீர்மானம் கொண்டுவரப்பட்டதில்லை. முதல்முறையாக ஞானேஷ் குமாருக்கு எதிராக அந்த முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

# மக்களவைக்கு மீண்டும் தலைமை வகித்தார் ஓம் பிர்லா

## 'விதிகளுக்குப் புறம்பாக பேச யாருக்கும் உரிமை கிடையாது'


**புது தில்லி, மார்ச் 12:** மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவை பதவி நீக்கக்கோரி எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த தீர்மானம் தோல்வியுற்ற நிலையில், அவை அலுவல்களுக்கு அவர் வியாழக்கிழமை மீண்டும் தலைமை வகித்தார்.

'மக்களவை அலுவல்களை தொடர்ந்து நேர்மையாகவும், பாரபட்சமின்றியும் நடத்துவேன்; விதிகளுக்குப் புறம்பாக பேச யாருக்கும் உரிமை கிடையாது' என அவர் உறுதிபட தெரிவித்தார்.

நடப்பு நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் கட்ட அமர்வு கடந்த ஜன. 28 முதல் பிப்.13 வரை நடைபெற்றது. அப்போது, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா பாரபட்சமாக செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டி, அவருக்கு எதிராக பதவி நீக்க தீர்மானம் கொண்டுவர காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தரப்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டது. 118 எம்.பி.க்கள் இந்த நோட்டீஸில் கையொப்பமிட்டிருந்தனர்.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 96-இன்கீழ் மக்களவைத் தலைவர் அல்லது துணைத் தலைவருக்கு எதிரான தீர்மானம் பரிசீலனையில் உள்ளபோது, அவை அலுவல்களுக்கு அவர் தலைமை தாங்க முடியாது. எனவே, தனக்கு எதிராக நோட்டீஸ் அளிக்கப்பட்ட நாளில் இருந்து (கடந்த பிப்.10) அவை அலுவல்களுக்கு ஓம் பிர்லா தலைமை வகிக்கவில்லை. அவைக்கும் வரவில்லை.

இந்தச் சூழலில், பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு கடந்த திங்கள்கிழமை தொடங்கியது. கடந்த செவ்வாய்க்கிழமை ஓம் பிர்லாவுக்கு எதிரான தீர்மானம் மீது 10 மணி நேர விவாதம் தொடங்கியது. புதன்கிழமையும் தொடர்ந்த இந்த விவாதத்தின் இறுதியில் குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.



மக்களவையை வியாழக்கிழமை தலைமை வகித்து நடத்திய அவைத் தலைவர் ஓம் பிர்லா.

**மக்களவைக்கு வந்தார்:** இதைத் தொடர்ந்து, சுமார் ஒரு மாதத்துக்குப் பின் மக்களவைக்கு வியாழக்கிழமை வந்த ஓம் பிர்லா, அவை அலுவல்களுக்கு தலைமை வகித்தார். ஆளும்தரப்பு எம்.பி.க்கள் மேஜையைத் தட்டி வரவேற்பு தெரிவித்தனர்.

ஓம் பிர்லா பேசுகையில், 'மக்களவையின் தலைமை ஒரு தனிநபருக்குச் சொந்தமானதல்ல; அது, அவை மாண்பின் அடையாளச் சின்னம். இந்த அவையானது, விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்கீழ் சீரிய முறையில் செயல்படுகிறது. யார் ஏற்றாலும், ஏற்காவிட்டாலும் ஏற்கெனவே வகுக்கப்பட்ட விதிமுறைகளின்கீழ் மக்களவை தொடர்ந்து செயல்படும்.

அவை விவாதத்தின்போது, என் மீது நம்பிக்கையை வெளிப்படுத்திய உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி. எனக்கு எதிராகப் பேசியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது கடமையை முழு நேர்மையுடனும், பாரபட்சமின்றியும் தொடர்ந்து மேற்கொள்வேன்.

**உரிமை கிடையாது:** கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்ற விவாதத்தில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் பேச போதிய வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை என்றும், அவர் விரும்பும் நேரத்தில், விரும்பும் விஷயம் குறித்துப் பேச அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் சில உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அவையில் பேச ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது. ஆனால், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். எந்தவொரு உறுப்பினரும் அது பிரதமரோ அல்லது அமைச்சரோகூட அவைத் தலைவரின் அனுமதியின்றி பேச முடியாது.

தாங்கள் விரும்பும் நேரத்தில், விரும்பும் விஷயங்களைப் பேச யாருக்கும் அனுமதி கிடையாது. நடைமுறைகளின்படியே பேச முடியும். அவையில் பேச்சு சுதந்திரம் உள்ளது. அதேநேரம், அந்தச் சுதந்திரம் விதிமுறைகளுக்கு உள்பட்டதாகும். விதிகளுக்கு புறம்பாக பேச யாருக்கும் உரிமை இல்லை. அவையின் மாண்புக்கு முரணாக யாரேனும் நடந்து கொண்டால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்படும்.

உறுப்பினர்கள் பேசும்போது அவர்களின் மைக்கை அணைக்க என்னிடம் எந்த பொத்தானும் இல்லை. அவைத் தலைவர் அனுமதிக்கும்போது, மைக் இயக்கப்படுகிறது என்றார் ஓம் பிர்லா.

# ‘சி-விஜில்’ செயலியில் பெறப்படும் புகார்கள் மீது நடவடிக்கை

## சென்னை மாவட்டத் தேர்தல் அலுவலர் உத்தரவு

**சென்னை, மார்ச் 12:** தமிழக சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு ‘சி - விஜில்’ செயலி வாயிலாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் மீது தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என சென்னை மாவட்டத் தேர்தல் அலுவலர் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை மாவட்டத்துக்குட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளின் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஜெ.குமரகுருபரன் தலைமையில் தேர்தல் நடத்தும் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில், ஜெ.குமரகுருபரன் பேசியதாவது: வரும் 2026 சட்டப் பேரவைத் தேர்தல் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும். அதற்கு ஏதுவாக, தேர்தல் நடத்தை விதிமுறைகளை அமல்படுத்தி கண்காணிக்க தேர்தல் இணைப்புப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சட்ட விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் செலவின கண்காணிப்புக்காக தேர்தல்கைப்பற்றுகைமேலாண்மை அமைப்பு 20-க்கும் மேற்பட்ட வெவ்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் இப்பணியில் தீவிரமாக ஈடுபடுத்தப்படவுள்ளனர். மேலும், ‘சி - விஜில்’ செயலியின் வாயிலாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அவர் உத்தரவிட்டார்.

இந்தக் கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் க. கற்பகம், மாவட்ட வருவாய் அலுவலர் நா. பூஷ்ணாதேவி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ஓபிசி கிரீமி லேயர் மீதான தீர்ப்பு: முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு

**சென்னை, மார்ச் 12:** ஓபிசி கிரீமி லேயர் நிர்ணயம் தொடர்பாக உச்சநீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்ட பதிவு:

ஓபிசி (இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) மக்களின் நீதிக்கான பல்லாண்டுப் போராட்டத்துக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. ஓபிசி கிரீமி லேயர் பிரிவினரை நிர்ணயிப்பது தொடர்பாக உச்சநீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பை வரவேற்கிறேன். கிரீமி லேயர்நிர்ணயத்தின்போது,ஊதிய வருமானத்தையும், தொழில் அல்லது சொத்து மூலமாக ஈட்டும் வருமானத்தையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கக் கூடாது என்பதை இந்தத் தீர்ப்பு வலியுறுத்தியுள்ளது. ஓபிசி மக்களின் நியாயமான உரிமைகள் கிடைக்காமல் போவதில் இருந்து பாதுகாக்கிறது.

குடிமைப் பணித் தேர்வுகளுக்கான தகுதி வரையறை தொடர்பான உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புகளை உறுதி செய்துள்ளது.

பல்வேறு துறைகளின் வேலை வாய்ப்புகளில் ஓபிசி மக்களுக்கு எதிராக இருந்த பாகுபாட்டை நிராகரித்திருக்கிறது. இட ஒதுக்கீடு என்பதே சமூக ரீதியாகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கானது எனும் நோக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

இந்த வழக்கில் உண்மையாகவே பிற்படுத்தப்பட்ட ஓபிசி பிரிவினர் பலரின் நியாயமான உரிமையை மறுக்கும் நிலைப்பாட்டை மத்திய அரசு எடுத்து வாதாடியது.

மண்டல் குழு அடிப்படையிலான இட ஒதுக்கீடு அமலுக்கு வந்து 30 ஆண்டுகளாகியும், நாட்டின் பல முன்னணி உயர் கல்வி நிறுவனங்களிலும் மத்திய அரசுப் பணிகளிலும் பல ஓபிசி பணியிடங்கள் நிரப்பப்படாமலேயே உள்ளன.

மருத்துவப் படிப்புகளுக்கான அகில இந்திய ஒதுக்கீட்டில் 27 சதவீத ஓபிசி இட ஒதுக்கீட்டை உறுதி செய்தது உள்பட சமூக நீதிக்கான பல போராட்டங்களை திமுக முன்னெடுத்து வருகிறது.

ஏற்கெனவே குடிமைப் பணித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றும் தங்களுக்கான இடங்கள் மறுக்கப்பட்ட ஓபிசி தேர்வர்களுக்கு மத்திய அரசு கூடுதல் பணியிடங்களை உருவாக்கி, அரசமைப்பின் சமத்துவ நெறியோடு செயல்பட்டு, அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குத் தீர்வு காண வேண்டும் எனவும் வலியுறுத்துகிறேன் என்று அந்தப் பதிவில் முதல்வர் தெரிவித்துள்ளார்.

# தமிழகப் பொறுப்பு ஆளுநராக ஆர்.வி.அர்லேகர் பதவியேற்பு

## உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்

**சென்னை**

தமிழகப் பொறுப்பு ஆளுநராக ஆர்.வி.அர்லேகருக்கு, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி நேற்று பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என்.ரவி, மேற்கு வங்க மாநில ஆளுநராகவும், கேரள மாநில ஆளுநராக இருந்து வரும் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், தமிழகத்தின் பொறுப்பு ஆளுநராகவும் செயல்படுவார் என குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அறிவித்திருந்தார். அதன்படி, தமிழகத்தின் பொறுப்பு ஆளுநராக ஆர்.வி.அர்லேகர் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி சென்னை ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்றது. ஆர்.வி.அர்லேகருக்கு, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, தமிழக அமைச்சர்கள், தலைமைச் செயலர் என்.முருகானந்தம், ஆர்.வி.அர்லேகரின் மனைவி அனகா அர்லேகர், தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், தெலங்கானா முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழக ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் நேற்று பதவி ஏற்றுக்கொண்டார். சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர். படம்: எஸ்.சத்தியசீலன்

பொறுப்பு ஆளுநராகப் பதவியேற்ற ஆர்.வி.அர்லேகருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பொன்னாடை போர்த்தி, பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார். அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், பாமக தலைவர் அன்புமணி, தமாகா தலைவர் ஜி.கே.வாசன் உள்ளிட்ட பலர் ஆளுநர் அர்லேகருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஆர்எஸ்எஸ் இயக்கத்தில் இணைந்து தனது பொது வாழ்க்கையைத் தொடங்கிய அர்லேகர், கடந்த 1989-ல் கோவா மாநில பாஜகவில் இணைந்து, கட்சி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றினார்.

பின்னர், 2002-ல் எம்எல்ஏவாக வெற்றி பெற்றார். கோவா மாநில சட்டப்பேரவைத் தலைவராகவும், மாநில பாஜக தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார். மேலும், பிஹார், இமாச்சல் ஆளுநராகவும் பதவி வகித்துள்ளார்.

**பொது அறிவு:** சாங்காய் மான் இனத்தை குறிக்கும் வகையில் மணிப்பூரில் சாங்காய் திருவிழா ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் கடைசி 10 நாட்களில் நடைபெறுகிறது. மாநிலத்தின் கலாச்சாரம், பாரம்பரியம், கைவினைப் பொருட்கள், உணவு மற்றும் கலைகளைப் பறைசாற்றும் வகையில் இது அமைகிறது.

### ஓபிசி கிரீமிலேயர் தொடர்பான உச்ச நீதிமன்ற தீர்ப்பு

# நீதிக்கான போராட்டத்துக்கு வெற்றி

## முதல்வர் ஸ்டாலின் வரவேற்பு

**சென்னை**

ஓபிசி கிரீமிலேயர் பிரிவினர் நிர்ணயம் தொடர்பான உச்ச நீதிமன்ற தீர்ப்பை வரவேற்பதாகவும், இது அந்த மக்களின் நீதிக்கான போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

ஓபிசி மக்களின் நீதிக்கான பல்லாண்டு போராட்டத்துக்கு மாபெரும் வெற்றி. ஓபிசி கிரீமிலேயர் பிரிவினர் நிர்ணயம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்கிறேன். கிரீமிலேயர் நிர்ணயத்தின்போது ஊதிய வருமானத்தையும் தொழில் அல்லது சொத்து மூலமாக ஈட்டும் வருமானத்தையும் ஒரே தட்டில் வைத்து பார்க்கக்கூடாது என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

ஓபிசி மக்களின் நியாயமான உரிமைகள் கிடைக்காமல் போவதில் இருந்து இந்த தீர்ப்பு பாதுகாக்கிறது. குடிமைப் பணித் தேர்வுகளுக்கான தகுதி வரையறை தொடர்பான உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளையும் உறுதி செய்துள்ளது. பல்வேறு துறைகளின் வேலைவாய்ப்புகளில் ஓபிசி மக்களுக்கு எதிராக இருந்த பாகுபாட்டை நிராகரித்திருக்கிறது.

இட ஒதுக்கீடு என்பதே சமூக ரீதியாக பிற்படுத்தப்பட்டவர்களுக்கானது எனும் நோக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

எனினும், இந்த வழக்கில் உண்மையாகவே பிற்படுத்தப்பட்ட ஓபிசி பிரிவினர் பலரின் நியாயமான உரிமையை மறுக்கும் நிலைப்பாட்டை என்டிஏ அரசு எடுத்து வாதாடியது. அது மட்டுமல்லாமல், முன்னேறிய வகுப்பினருக்கான பொருளாதார ரீதியான இடபிள்யூஎஸ் இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து, இட ஒதுக்கீட்டுக்கான அடிப்படையாக அரசியலமைப்புச் சட்டம் வகுத்துத் தந்த வரையறையை மீறியது.

மருத்துவப் படிப்புகளுக்கான அகில இந்திய தொகுப்பில் 27 சதவீத ஓபிசி இட ஒதுக்கீட்டை உறுதி செய்தது உள்ளிட்ட பலவற்றிலும் சமூக நீதிக்காக திமுக தொடர்ச்சியாகப் போராடி வருகிறது. சமூக நீதிக்கான நம் போராட்டம் தொடரும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக, சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கு உள்ளிட்ட பாலியல் வழக்குகளிலும் போக்சோ வழக்குகளிலும் விரைந்து தீர்ப்பு வழங்கப்படுவது நம்பிக்கை அளிக்கிறது. இந்த வழக்குகள் மக்கள் மத்தியில் கவனம் பெற்றதும் இதற்குக் காரணமாக இருக்கலாம். அதேநேரம், கவனம்பெற்ற அனைத்து வழக்குகளும் விரைந்து முடிக்கப்படுவதில்லை. 2019 பொள்ளாச்சி பாலியல் வன்முறை வழக்கில் 2025இல்தான் தீர்ப்பு வழங்கப்பட்டது. 1992இல் நாட்டையே உலுக்கிய வாச்சாத்தி பாலியல் வன்கொடுமை வழக்கில் 30 ஆண்டுகள் கழித்துத்தான் நீதி கிடைத்தது.

இதுபோன்ற தாமதத்தால், பாதிக்கப்படுகிறவர்கள் நீதியை நாடுவது குறையும்; குற்றவாளிகள் அச்சமில்லாமல் குற்றங்களில் ஈடுபட வழிவகுக்கும். பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 346இன்படி பாலியல் வல்லுறவு வழக்குகளில் குற்றம் பதிவுசெய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் விசாரணை முடிக்கப்பட வேண்டும். போக்சோ வழக்குகளில் விசாரணை முடிந்த 45 நாள்களுக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆனால், பெரும்பாலான வழக்குகளில் இது கடைப்பிடிக்கப்படுவதில்லை.

காவல் துறை – நீதித் துறையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறை, கட்டமைப்புச் சிக்கல், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், பாலின – சாதிரீதியான கண்ணோட்டம் உள்ளிட்ட பல காரணங்கள் தாமதத்துக்கு வழிவகுக்கின்றன. பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலங்களின் வரிசையில் தமிழகம் முன்னிலை வகித்தாலும், பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்வதையும் நீதிமன்றங்களில் தேங்கியிருக்கும் பாலியல் வழக்குகளையும் யாரும் மறுக்க முடியாது. இந்நிலை மாற வேண்டும். தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் தாமதிக்கப்படாமல் நீதி கிடைக்கும் என்கிற நம்பிக்கை ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்பட அரசு, சமூகம், நீதி அமைப்புகள் துணைநிற்க வேண்டும்!

# தலைமை தேர்தல் ஆணையரை பதவி நீக்க நோட்டீஸ்

## மக்களவை, மாநிலங்களவையின் 193 எம்.பி.க்கள் கையெழுத்து

■ புதுடெல்லி

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நோட்டீஸ் வழங்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இந்த நோட்டீஸில் 193 எம்பிக்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சார்பில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் மக்களவையில் நேற்று முன்தினம் தோல்வி அடைந்தது. இந்த சூழலில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நோட்டீஸ் வழங்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு உள்ளன. இந்த நோட்டீஸில் 130 மக்களவை எம்பிக்கள், 63 மாநிலங்களவை எம்பிக்கள் என மொத்தம் 193 பேர் கையெழுத்திட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த நோட்டீஸ் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இன்று சமர்ப்பிக்கப்படலாம் என்று தெரிகிறது.



ஞானேஷ் குமார்

ஒருதலைப்பட்சமாக செயல்படுவது அல்லது திறனற்ற செயல்பாடு ஆகிய இரு காரணங்களுக்காக தலைமைத் தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்யக் கோரி நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரலாம். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில் மத்தியில் ஆளும் பாஜகவுக்கு ஆதரவாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் செயல்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. இதை அடிப்படையாக வைத்து அவரை பதவி நீக்கம் செய்யக் கோரி நோட்டீஸ் வழங்கப்பட உள்ளது.

இந்த நோட்டீஸை மக்களவை சபாநாயகரிடம் சமர்ப்பிக்க குறைந்தபட்சம் 100 எம்பிக்கள் கையெழுத்திட்டிருக்க வேண்டும். இதேபோல மாநிலங்களவைத் தலைவரிடம் நோட்டீஸை சமர்ப்பிக்க 50 எம்பிக்கள் நோட்டீஸில் கையெழுத்திட்டிருக்க வேண்டும்.

இரு அவைகளிலும் நோட்டீஸ் ஏற்கப்பட்டால் உச்ச நீதிமன்ற நீதிபதி, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி, மூத்த சட்ட நிபுணர் அடங்கிய 3 நபர் குழு அமைக்கப்படும். இந்த குழு அனைத்து தரப்பினரிடமும் விசாரணை நடத்தும். தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் இருப்பதாக சிறப்புக் குழு கருதினால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தீர்மானம் கொண்டு வரப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படும். இதை நிறைவேற்ற மூன்றில் இரு பங்கு எம்பிக்களின் ஆதரவு தேவை.

# நாட்டின் சில்லறை விற்பனை பணவீக்கம் 3.21% ஆக உயர்வு

■ புதுடெல்லி

நாட்டின் சில்லறை விற்பனை பணவீக்கம் கடந்த பிப்ரவரி மாதத்தில் 3.21% ஆக அதிகரித்துள்ளது. இது முந்தைய ஜனவரி மாதத்தில் 2.74% ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

மத்திய புள்ளியியல் அலுவலகம் நேற்று வெளியிட்ட நுகர்வோர் விலை குறியீட்டு புள்ளிவிவரங்களின்படி, உணவுப் பொருட்களின் விலை உயர்வு காரணமாகவே இந்தப் பணவீக்க உயர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 2024-ம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு கணக்கிடப்பட்ட புதிய வரிசை புள்ளிவிவர அடிப்படையில் இந்தத் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஜனவரி மாதத்தில் 2.13 சதவீதமாக இருந்த உணவுப் பொருட்கள் பணவீக்கம், பிப்ரவரி மாதத்தில் 3.47 சதவீதமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக, தக்காளி மற்றும் காலிஃபிளவர் போன்ற காய்கறிகளின் விலை உயர்வு சந்தையில் எதிரொலித்துள்ளது. மேலும், தேங்காய் மற்றும் கொப்பரைத் தேங்காய் விலையும் அதிகரித்துள்ளது.

அதேசமயம், வெங்காயம், உருளைக்கிழங்கு, பூண்டு, துவரம் பருப்பு மற்றும் லிச்சி பழம் ஆகியவற்றின் விலையில் சரிவு காணப்பட்டுள்ளது.

பணவீக்க விகிதமானது கிராமப்புறங்களில் 3.37% ஆகவும், நகர்ப்புறங்களில் 3.02% ஆகவும் பதிவாகியுள்ளது. நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு சற்று அதிகமாக இருப்பது புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.